**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 21ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.3/2024 மற்றும் இடைநிலை மனு எண்.4/2024</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 79/2024</u>**

**<u>இடைநிலை மனு எண்.3/2024</u>**

P. செல்வராஜ் ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. செந்தில்பிரபு

2. B. ராசு (எ) பரமகுருசாமி

3. S. ரங்கநாதன்

4. P. ராமசாமி

5. P. ரங்கநாதன் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**<u>இடைநிலை மனு எண்.4/2024</u>**

1. N. செந்தில்பிரபு

2. M. ராசு (எ) பரமகுருசாமி

3. S. ரங்கநாதன்

4. P. ராமசாமி

5. P. ரங்கநாதன் ...மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

//எதிர்//

P. செல்வராஜ் ...எதிர்மனுதாரர் / வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இடைநிலை மனு எண்.3/24 ல் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.R.நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகேஷ், அவர்கள் ஆஜராகியும் மற்றும் இடைநிலை மனு எண்.4/2024 ல் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.நாகராஜன், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான உத்தரவு

## இடைநிலை மனு எண்.3/2024

உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இம்மனுவில் சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களை சர்வேயர் மூலம் நேரில் சென்று கள ஆய்வு செய்தும் சொத்தை அளவீடு செய்தும் புகைப்படம் எடுத்து அறிக்கையாக தாக்க செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனு சொத்தானது மனுதாரருக்கு 21.12.1994ம் தேதிய பத்திர எண்.6328/1994 கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்தாகும். எதிர்மனுதாரர்கள், 3ம் நபர்கள் மற்றும் மனுதாரர் சொத்துக்கு அருகில் உள்ள கானாத்தம்மன் கோவில் நிர்வாகிகள் ஆவார்கள். மனுதாரர் கடந்த 21.12.1994ம் தேதி சொத்தை கிரையம் பெற்ற நாளில் இருந்து சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வருகிறார். இந்நிலையில் 26.05.2024ம் தேதி எதிர்மனுதாரர்கள் சுமார் 25 பேர்களுடன் வந்து மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வேலியை J.C.B. இயந்திரம் உதவியுடன் பிடுங்கி எடுத்தனர். மனுதாரருக்கு கிரையம் மற்றும் பட்டாபடி பாத்திய பூமியில் சட்ட விரோதமாக அத்துமீறி நுழைந்து சட்டத்திற்கு புறம்பாக பிடுங்கி எறிந்தனர். மனுதாரர் இது சம்மந்தமாக 26.05.2024ம் தேதி சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்கப்பட்டு மேற்படி புகாரின் பேரில் காவல்துறை எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1.2). அதன் பின்னிட்டு மனுதாரர் 30.05.2024ம் தேதி கோவை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அளித்தார். புகாரை விசாரித்த காவல்துறை அதிகாரிகள் சிவில் சம்மந்தமாக உள்ளதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தி அனுப்பினார்கள். மேலும் தாவா சொத்தின் உண்மைத் தன்மையை அறிய ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமித்து கள ஆய்வு செய்தால் மட்டுமே உண்மைத்தன்மை தெரிய வரும் என்பதால் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவின் சுருக்கம்:**

2.1). மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இந்த எதிருரையின் ஒரு அங்கமாக இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். காவல் நிலைய விசாரணையின் போதும், மனுதாருக்கும் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட பிரச்சினையின் போதும் எதிர்மனுதாரர்கள் மனுச் சொத்தையும், ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட எதிர்வழக்குரையில் சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தையும் நில அளவையரை வைத்து அளந்து கொள்ளலாம் என்று கூறிய போது அதற்கு மனுதாரர் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், தற்போது இம்மனுவினை நீதிமன்ற ஆணையாளர் மூலமாக அளக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

2.2). மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, மனுச்சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக அளந்து பார்க்கின்றபோதும், ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலுக்கும் பாத்தியப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தனியே தாக்கல் செய்துள்ள உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXVI விதி 9 மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தினையும் சேர்த்து

அளந்து பார்க்க வேண்டும்.

2.3). மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மனுச்சொத்தையும், எதிர்மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXVI விதி 9ன் (எதிர்வழக்குரை) கீழ் குறிப்பிட்டுள்ள சொத்தினையும் சேர்த்து அளந்து பார்த்து, அதன் அளவுகளையும், எல்லைகளையும் மற்றும் தற்போது கோவிலில் கட்டியுள்ள காம்பவுண்ட் சுவர், கோவிலின் தற்போதைய நிலை என அனைத்தையும் நீதிமன்ற ஆணையாளர் மூலமாக பார்வையிட்டு, புகைப்படத்துடன் அறிக்கை தாக்கல் செய்வதற்கு எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை.

**<u>இடைநிலை மனு எண்.4/2024</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை நீதிமன்ற ஆணையாளரை நியமித்து அளவீடு செய்தும், எல்லை விபரம் குறித்தும் ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலின் தற்போதைய நிலையையும், காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளது குறித்தும் புகைப்படம் எடுத்து அதனை அறிக்கையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3). மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**:

3.1). எதிர்மனுதாரர்/வாதி ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலுக்கு கிழபுறம் உள்ள சொத்தின் உரிமையாளர் ஆவார். ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள கம்பு வேலியை நீக்கிவிட்டு, காம்பவுண்ட் சுவர் கட்டும் பணி ஸ்ரீ கானாத்தம்மன் கோவில் வழிபாட்டாளர்கள் செய்து வந்தனர். அப்போது ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலுக்கு கிழபுறமும், வாதியின் சொத்திற்கு மேற்கு புறமும் அமைந்துள்ள தென்வடல் கம்பி வேலியை அகற்றிவிட்டு காம்பவுண்ட் சுவர் கட்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர்/வாதி அதற்கு இடையூறு செய்து காம்பவுண்ட் சுவர் கட்டவிடாமல் மனுதாரர்களின் அமைதியான

சுவாதீனத்திற்கு தொடர்ந்து இடையூறு ஏறப்டுத்தி வருகிறார்.

3.2). மனுதாரர்கள் மற்றும் ஸ்ரீ கானாத்தம்மன் கோவில் வழிபாட்டாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் அமைத்திருந்த கம்பி வேலியை நீக்கிவிட்டு, காம்பவுண்ட் சுவர் கட்ட எதிர்மனுதாரர்/ வாதி இடையூறு ஏற்படுத்தி வருவதால் மற்ற எல்லைகளில் காம்பவுண்ட் சுவர் தற்சமயம் கட்டியுள்ளதாலும், எதிர்மனுதாரர்/ வாதியின் சொத்தின் எல்லை கல்லால் ஆன சுவருடன் முடிவடைந்துவிட்டது. ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலின் எல்லை விபரங்கள், அமைப்பு, காம்பவுண்ட் சுவர் ஆகியவற்றின் உண்மைத்தன்மை மற்றும் தற்போதைய நிலையை அறிய நீதிமன்ற ஆணையாளரை நியமித்து கள ஆய்வு செய்ய வேண்டியது இவ்வழக்கிற்கும் மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் எதிர்வாதத்தின் நிரூபணத்திற்கும் அவசியமான ஒன்றாகும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>4). எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவின் சுருக்கம்:</u>**

4.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனுவில் கூறியுள்ள சங்கதிகளான ஸ்ரீ கானாத்தம்மன் திருக்கோவில் மனுதாரர்கள் குலதெய்வக் கோவில் என்றும் அத்திருக்கோவிலானது கடந்த 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த திருக்கோவில் என்றும் மேற்படி மனுதாரர்கள் கோவில் அருகில் உள்ள இடத்தில் எதிர்மனுதாரர் வேலி அமைத்து இடைஞ்சல் செய்தார் என்றும் மேற்படி மனுதாரர்கள் அந்த இடத்தை நீதிமன்ற ஆணையாளர் கொண்டு அளக்க வேண்டும் என்றும் மேற்படி இடைக்கால மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மேலும் எதிர்மனுதாரர் தான் தாக்கல் செய்துள்ள தாவாவின் தாவா சொத்தை அளப்பதற்கு இந்நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க வேண்டி I.A.No.3/2024 என்ற இடைக்கால மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது.

4.2). மேற்படி மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு தற்போது நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எதிர்மனுதாரர்/வாதியின் தாவா சொத்தருகில் உள்ள கோவில் பொறுத்து எதிர்மனுதாரர்/வாதி கோவில் வழிப்பாட்டிற்கு வரும் நபர்களுக்கு உதவ வேண்டி சிறு இடத்தை கோவில் அருகில் விட்டுள்ளார். அதனை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முழுமையாக எடுத்து கொண்டு சட்ட விரோதமாக பலனடைய வேண்டி தங்களது இடம் என உரிமை கொண்டாடி சட்டவிரோதமாக வேலியை எடுத்து உண்மையினை மறைத்து எதிருரையையும், எதிர் கோரிக்கையும் தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவில் அறுதியிட்ட எந்த ஆவணத்தையும், தாக்கல் செய்யவில்லை. அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மேற்படி மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுடையது ஆகும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**5.** இம்மனுக்கள் அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**6.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** மனுக்களின் பிரமாணப்பத்திரிக்கை, எதிருரைகள், மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ளது.

7.1). இந்நிலையில் வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இம்மனுவில் சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களை சர்வேயர் மூலம் நேரில் சென்று கள ஆய்வு செய்தும் சொத்தை அளவீடு செய்தும் புகைப்படம் எடுத்து அறிக்கையாக தாக்க செய்ய வேண்டியும், பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையாளரை நியமித்து அளவீடு செய்தும், எல்லை விபரம் குறித்தும் ஸ்ரீ கானாத்தம்மன் கோவிலின் தற்போதைய நிலையையும், காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளது குறித்தும் புகைப்படம் எடுத்து அதனை அறிக்கையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.2). வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையாளரை நியமித்து மனு சொத்துக்களை அளவீடு செய்து, எல்லை நிர்ணயம் செய்து, புகைப்படம் எடுத்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. அசல் வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், எதிரிடைக் கோரிக்கையில் விளம்புகை பரிகாரமும் கோரியுள்ள நிலையில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பிரச்சினை குறித்து நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்தால் மட்டுமே பிரச்சினை குறித்து முழுமையான தீர்வை காணமுடியும். எனவே நீதியின் நலன் கருதி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8). முடிவாக வழக்கறிஞர் திரு.D.தர்சனா, (M.S.No.7525/2021), அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ. 15,000/- நியமிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து வாதியின் சொத்தையும் பிரதிவாதிகளின் சொத்தையும் நில அளவையர் உதவியுடன் மனு சொத்துக்களை அளவீடு செய்தும், எல்லை விபரம் குறித்து தற்போதைய நிலையையும், புகைப்படம் எடுத்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பிறகு அவருக்கு உரிய ஊதியம் வழங்க உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வாய்தா 07.11.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.3/2024 and
IA.No.4/2024 in
OS.79/2024
Dated:07.10.2025
DMC, Sulur.